பெற்றோருக்கான தகவல்

# எங்கள் மகள் / மகன் விசாரணைச்சிறையில் உள்ளார்

**விசாரணைச்சிறையின் நோக்கம் என்ன?**

விசாரணைச்சிறையின் நோக்கம் என்னவென்றால் இளையோர் அரசசட்டத்தரணி வழக்குதொடரப்படும் ஆரம்பக்கட்டத்தில் குற்றம்சுமத்தப்பட்ட ஒருவர் மற்றைய குற்றம்சுமத்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசிக்க முடியாமல் இருக்கும் காலகட்டத்தில், ஆதாரங்களை சேகரிப்பதற்கு வழிவகுப்பதுடன் மற்றும்/அல்லது குற்றம் சுமத்தப்பட்டவர் தப்பிச்செல்லும் சந்தர்ப்பத்தையும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது. கடும்குற்றத்தை (Verbrechen) அல்லது நடுத்தரமான குற்றத்தை (Vergehen) இழைத்ததற்கான உடனடிச்சந்தேகம் ஏற்படும் தருணத்தில் மாத்திரம் விசாரணைச்சிறை உத்தரவு பிறப்பிக்கலாம். அத்துடன் கீழ்க்காணப்படுவனவற்றில் ஏதேனும் ஒன்றாவது தடுத்துவைத்தலுக்கு அடிப்படை காரணியாக அமையவேண்டும்.

- தப்பிச்செல்லும் அபாயம்
- கூட்டுச்சதி-அல்லது இருட்டடிப்பு
- செய்த தவறை திரும்பச்செய்யும் அபாயம்
- (எச்சரிக்கை விடுத்ததை) நடைமுறைப்படுத்தும் அபாயம்

**எங்கள் மகள்/மகனுடன் எப்படி தொடர்புகொள்ள முடியும்?**

கடிதமூலத்தொடர்பு எந்நேரமும் சாத்தியம். கடிதம் இளையோர் அரசசட்டத்தரணிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். கடிதஉள்ளடக்கம் சோதிக்கப்பட்டு அதன்பின்னர் அதை சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்படும். கடித்தில் வழக்கு சம்பந்தமான எவ்விதமான தகவல்களையும் கொண்டிருத்தல் கூடாது. அப்படி இல்லாவிடின் அரசசட்டத்தரணி கடிதங்களை தொடர்ந்து அனுப்பாதிருக்க நிரந்தரமுடிவு எடுத்துக்கொள்ளலாம்.
சிறையில் சென்று பார்ப்பதற்கு உரிய இளையோர் அரசசட்டதரணியின் எழுத்துமூல அனுமதிப்பத்திரமும் சிறைச்சாலையின் நேரநியமனமும் தேவை.

**விசாரணைச்சிறை எவ்வளவுகாலம் நீடிக்காலம்?**

விசாரணைச்சிறை நீடிக்கும் காலம் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, வழக்குச்சிக்கல் போன்ற பலகாரணிகளில் தங்கியுள்ளது. காவல்துறையினரின் விசாரணைக்கும் இளையோர் அரச சட்டத்தரணியின் விசாரணைக்கும் குற்றச்செயலைப்பொறுத்து வேறுபட்ட அளவு காலம் தேவைப்படும். விசாரணைச்சிறை ஏழுநாட்களுக்கு அதிகமானால் சிறைநீடிப்பு விண்ணப்பத்தை அரசசட்டத்தரணி விசாரணைச்சிறைக்கு ஆணையிடும் நீதிமன்றத்தில் (Zwangsmassnahmengericht) சமர்ப்பிப்பார். நீதிமன்றம் அதை பலமுறை நீடிக்கலாம். அந்த நீடிப்புக்காலம் ஒவ்வொருதடவையும் கூடியது ஒரு மாதத்திற்கு செய்யமுடியும். அனுபவத்தின் அடிப்படையில் வயதுவந்தவர்களைப்போல் அல்லாமல் இளையோர் விசாரணைச்சிறை 2-3 கிழமைகளுக்கு மேற்படுவது அரிது.

**விசாரணைச்சிறையில் எங்களுக்கு உடன்பாடு இல்லையெனில் எந்த வழிகளை நாங்கள் நாடலாம்?**
விசாரணைச்சிறை ஆணைக்கு எதிராக அது கிடைக்கப்பெற்று அல்லது வாய்வழி கூறப்பட்டு 10 நாட்களுக்குள் எழுத்துமூலம், காரணத்துடன் நீதிமன்றத்தில் (Zwangsmassnahmengericht Zürich) முறையிடலாம். குற்றம் சுமத்தப்பட்டவரும் மற்றும் சட்டப்பிரதிநிதியும் எந்தநேரத்திலும் விசாரணைச்சிறையில் இருந்து விடுதலை கோரி விண்ணப்பிக்கலாம். கோரிக்கையை உரிய இளையோர் அரசசட்டத்தரணியிடம் எழுத்துமூலம் வழங்கப்படவேண்டும் அல்லது வாய்மூல அறிக்கை பதிவு செய்துகொள்ளப்பட வேண்டும். மற்றும் சுருக்கமான காரணம் காட்டப்படவேண்டும்.

**விசாரணைச்சிறையில் இருந்து எங்கள் மகள்/மகன் விடுதலையானபின்னர் என்ன நடக்கும்?**
ஓர் தண்டணை அச்சுறுத்திய குற்றச்செயல் செய்யப்பட்டுள்ளதா என்பதை தெளிவுபடுத்திக்கொள்வதே விசாரணையின் நோக்கம் இளைஞன் அல்லது யுவதி விசாரணைச்சிறையில் இருந்து விடுதலைசெய்யப்பட்டாலும் குற்றவழக்கு ஓர் முடிவுக்கு கொண்டுவரப்படாமல் இருப்பது அடிக்கடி வழக்கம். அதனால் மேலதிக விசாரணைகளும் கலந்துரையாடல்களும் அரசசட்டத்தரணியிடம் இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்.
ஓர் குற்றம் இழைக்கப்பட்டிருப்பின் அதற்குரிய தண்டணையை அரசசட்டத்தரணி முடிவெடுத்துக்கொள்வார். விசாரணைகள் நடந்துகொண்டிருக்கும் வேளை அவ்விளைஞன் அல்லது யுவதிக்கு ஓர் வளர்ப்புமுறைக்கவனிப்பு அல்லது சீர்திருத்தச்சிகிச்சை தேவையென அறியப்படும் போது அவருக்கு தண்டணையுடன் மேலதிக பாதுகாப்புநடவடிக்கைக்கும் உத்தரவுபிறப்பிக்கப்படும்.